AR
756



கச்சத்தீவு

யாருக்குச்சொந்தம்?

செ.திவான்

கச்சத்தீவு

யாருக்குச் சொந்தம்?

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

சுகைனா பதிப்பகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 80–வது நூல்

முதற் பதிப்பு	:	அக்டோபர், 2009
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை
அச்சிட்டோர்	:	சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி.
முகப்போவியம்	:	N. சங்கர், பாளையங்கோட்டை.
விலை	:	ரூபாய் இருபது

எண்ண அலைகள்

அண்மைக் காலமாக அனுதினமும் இலங்கை இராணுவத்தினரால் தமிழக மீனவர்களை அவலத்திற்கும் அவதிக்கும் உள்ளாக்கி வருகிறது கச்சத்தீவு கடற்பகுதி.

'கச்சத்தீவு' இதன் வரலாறுதான் என்ன? இது யாருக்குச் சொந்தம்? சுருக்கமாகச் சொல்லியுள்ளேன். 'கச்சத்தீவு யாருக்குச் சொந்தம்?' என்ற இந்த நூலில் ...

22.09.2009
பாளையங்கோட்டை

செ. திவான்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.

கச்சத்தீவு யாருக்குச் சொந்தம்?

அன்னைத் தமிழகத்தின் இராமேசுவரத்திலிருந்து 17 கி.மீ. வடக்கில் ஆள் அரவம் இல்லாத உயரம் குறைவான ஒரு குட்டித் தீவு '**கச்சத்தீவு**'.

பறவைகளின் ஒலிகளும், கடல் அலையின் ஒலியும், மரங்கள் அசைவினால் ஏற்படும் ஒலியும் தவிர வேறு ஒன்றையும் கேட்க முடியாத அமைதித் தீவாக இருந்த கச்சத் தீவு தற்போது தொடர்ந்து இந்திய அரசியலில் புயலைக் கிளப்பி வருகிறது.

பசுமை நிறம்

'டார்குயின்' எனும் பச்சை ஆமைகள் இங்கு இருந்தது; அதனால் பச்சைத்தீவு என்று அழைத்தனர்.* பசுமை நிறம் வளத்தைக் காட்டும்; கச்சத்தீவு வளம் நிறைந்தது. எனவே 'பச்சைத்தீவு' என்று வழங்கிய பெயர் நாளடைவில் கச்சத்தீவு என்றாயிற்று.

கச்சம் – ஆமை

கச்சம் என்றால் ஆமை.** ஆமைகள் மிகுதியாக வாழும் காரணத்தால் இது ஆமைத்தீவு, 'கச்சத்தீவு' என்று பெயர் பெற்றது.

ஒரு மீன்

'கச்சா' - 'கச்சு' - 'கச்சம்' என்பது இப்பகுதியில் மிகுதியாகக் கிடைக்கும் ஒரு வகைச் சிறு மீன்.*** எனவே இத்தீவு 'கச்சத்தீவு' ஆயிற்று.

---

* சிங்காரவேலன், வரலாற்றில் கச்சத்தீவு, திருச்சி, 1999, ப. 11.

** **'கால் ஆழ்ந்து அழுந்திக் கடல் புக்குழி கச்சம் ஆகி** கச்சம்–ஆமை (கூர்மாவதாரம்) – கம்பராமாயணம், சுந்தரகாண்டம், கடல் தாவுபடலம் – பாடல் 41.

*** கச்சம் – ஒரு மீன். கதிரைவேற்பிள்ளை இயற்றிய தமிழ்ச் சொல்லகராதி, முதல் பாகம், மதுரை, 1910, ப. 710.

அசுத்தமான தண்ணீர்

கச்சத்தீவில் நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. கச்ச - கச்சுப் போன - கெடுதல் அடைந்த - அசுத்தமான தண்ணீர் இங்குக் கிடைக்கும் காரணத்தால் இத்தீவு கச்சத்தீவு என்று பெயர் பெற்றது.*

உயரமில்லாத தீவு

கச்சா என்பதற்குத் 'தாழ்ந்த' என்றும் பொருள் கூறப்படுகிறது. தாழ்ந்த உயரமில்லாத தீவு என்னும் பொருளிலும் இத்தீவு இப்பெயரைப் பெற்றிருக்கக்கூடும்.

சங்கு புட்டித் தீவு

கச்சத்தீவின் சுற்றுக் கடலில் சங்கு குளிப்பர். எனவே இக்கடலைச் 'சங்கு வயல்' என்பர். கச்சத் தீவுக்கு 'சங்கு புட்டித் தீவு', 'சங்குபுட்டித் தீடை' என்னும் புனைபெயர்களும் உண்டு. இதற்குக் கண்ணகி அம்மன் பள்ளுப் பாட்டுகளில் சான்றுகள் உண்டு என்பர் சிங்காரவேலன்.

கச்சத்தீவு

கோழி முட்டை வடிவிலான கச்சத்தீவு, 15 கிலோ மீட்டர் நீளமும் 350 மீட்டர் அகலமும் உடையது. பரப்பளவு 285.2 ஏக்கர் ஆகும். யாழ்ப்பாணத்திலிருந்து 70 கி.மீ. தொலைவிலும், தலைமன்னாரிலிருந்து 25 கி.மீ. தொலைவிலும் உள்ள கச்சத் தீவு ராமேசுவரத்திலிருந்து 17 அல்லது, 18 கி.மீ. தொலைவில்தான் உள்ளது. விசைப் படகில் ஒரிரு மணிக்குள் சென்றுவிடலாம். கச்சத் தீவைச் சுற்றிலும் கடற்கரையில் கரும்பாறைகள் உள்ளன. கடல் நீரும் கரைப் பக்கத்தில் ஆழமாக இல்லை. எனவே விசைப்படகு அதன் அருகில் செல்லாது. எனவே 100 - 150 மீட்டர் தூரத்திலேயே விசைப் படகிலிருந்து இறங்கி கட்டு மரத்திலிருந்து ஏறிச் செல்வர்.

கச்சத்தீவின் வளம்

கச்சத்தீவு பாலைவனம் - பாறைகள் அடர்ந்தது. ஒன்றுக்கும் உதவாத நிலம் என்று கூறப்படுவது தவறானது. உண்மையில் கச்சத்தீவு வளமானது. மீன்வளம் மிக்கது. இராமநாதபுரம் வட்ட

* முனைவர் புலவர் செ. இராசு, கச்சத்தீவு, தஞ்சாவூர், 1997, ப. 4.

மீனவர்கள், கச்சத்தீவுப் பகுதியில் பரம்பரைப் பரம்பரையாகவே மீன்பிடித்து வந்தனர். (வருகின்றனர்) (தற்போது இலங்கை இராணுவத்தால் அனுதினமும் அல்லற்படுகின்றனர்)

'கால்சியம் கார்பனேட்' என்னும் சிமெண்ட் தயாரிக்கப் பயன்படும் ஓடக்கல் இங்கு உள்ளது. சங்குகளும், முத்துக்களும் கிடைக்கின்றன. பெட்ரோல் கிடைக்கவும் வாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. இயற்கைச் செல்வங்களைத் தன்னுள் அடக்கி வைத்துள்ள வளமான தீவு கச்சத்தீவு.

முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர்

மதுரைப் பெருநாட்டை ஆட்சி புரிந்த மதுரை நாயக்கர்களில், விசுவநாதநாயக்கர் (1529 - 1564), கிருஷ்ணப்பநாயக்கர் (1564 - 1572), வீரப்பநாயக்கரைத் (1572 - 1601) தொடர்ந்து முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் (1601 - 1609) ஐந்தாவது அரசராக ஆட்சி செய்த காலத்தில் இராமநாதபுரம் சீமையில் நல்லாட்சியை ஏற்படுத்த முனைந்து நின்றார்.

போகலூர் – சடையத்தேவர்

மதுரை மன்னன் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர், 'போகலூர்'* எனும் சிற்றூரை ஆண்டு கொண்டிருந்த சடையக்கத் தேவர் உடையன் ரகுநாதசேதுபதி என்பவரை மறவர் நாட்டுக்குத் (1604 - 1621) தலைவராக்கினார்.

இமயம் முதல் குமரி வரையும் உள்ள பற்பல ஊர்களிலிருந்து எண்ணற்ற மக்கள் நாள்தோறும் வந்து வழிபடும் இராமேஸ்வரம் - சேதுநாடு - சேதுநாட்டிற்கு பதி (காவலன்) 'சேதுபதி' என்று அழைக்கப்பட்டனர்.

சேதுபதி ஆட்சிக்குட்பட்ட பகுதி

கி.பி. 1609-இல் அளிக்கப்பட்ட சேதுபதியின் செப்பேட்டில் தலைமன்னார் எல்லை வரை சேதுபதி ஆட்சிக்குட்பட்ட பகுதி என்று கூறப்படுகிறது. சேதுபதிக்குரிய கடற்கரை ஊர்கள் 69. தீவுகள் 8 என்றும் குறிக்கப்பட்டுள்ளது. சேதுபதி அரசர்கட்கு உரிய எட்டுத் தீவுகளில் கச்சத்தீவும் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது.**

* போகலூர் – தற்போது சத்திரக்குடி எனும் புகைவண்டி நிலையம் அமைந்த ஊர். மீ. மனோகரன், கிழவன்சேதுபதி, சிவகங்கை, 1983, ப.43.

** முனைவர் செ. இராசு, கச்சத்தீவு, முற்கூறிய நூல், ப. 6.

இராமநாதபுரம் வட்ட கடற்கரை

169 மைல்[*] தொலைவு பரவியுள்ள மிக நீண்ட கடற்கரையை ராமநாதபுரம் மாவட்டம் பெற்றிருக்கிறது. சப்பாத்திக்கள்ளி, தென்னந்தோப்புகள், மீனவர் குடியிருப்புக்கள் ஆகியவற்றைக் கடலோரம் எங்கும் காணலாம். கடலோரமாக உள்ள சிற்றூர்கள் பெரும்பாலும் மீனவர்கள் வாழும் கிராமங்களே ஆகும்.

தீவுகள்

முதுகுளத்தூர் வட்டத்தில் கடற்கரைக்கு அப்பால் பிள்ளையார் முனைத்தீவு, ஆனைப்பாறைத் தீவு, நல்ல தண்ணீர்த் தீவு, சுளித் தீவு, உப்புத் தண்ணீர்த் தீவு என ஐந்து தீவுகள் உள்ளன.

இராமநாதபுரம் வட்டத்தில்

இராமேசுவரம் தீவு, சிங்களத் தீவு, குருசடைத் தீவு, பூமறிச்சன் தீவு, மணலித் தீவு, முயல் தீவு, மூளித் தீவு, வாலித் தீவு (வாளைத் தீவு), தலையாரித் தீவு, அப்பாத் தீவு, பூவரசன் ஹல்லித் தீவு, **கச்சத் தீவு** ஆகிய 12 தீவுகள் இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள தீவுகள் ஆகும்.

1972 – இராமநாதபுரம் மாவட்டம்

தமிழ்நாடு மாவட்ட விவரச் சுவடிகள் இராமநாதபுரம் எனும் தலைப்பில் 1972-இல் டாக்டர் அ. ராமசாமி அவர்களைக் கொண்டு இராமநாதபுரம் மாவட்டக் கெஜெட்டில் ஆங்கிலத்தில் வெளிவந்தது. 1990-இல் சோமெலே அவர்களால் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு அதன் தமிழாக்கம் வெளிவந்தது.

14.06.1972

“இராமநாதபுரம் மாவட்டம் விபரச் சுவடியை வெளியிட்டிருப்பதன் மூலம் இம்மாவட்டத்தின் சமூக வரலாற்றை ஆராய்வதற்குப் பயனுடையதொரு பணி நிறைவேற்றப் பட்டிருக்கிறது மாவட்டத்து மக்களின் வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க கூறுகளைப் பற்றி விளக்கமான செய்திகள் தாங்கியதாகவும் உள்ளது. மாநிலத்தில் ஆட்சியாளர்களுக்கும், நலப்பணிகளிலும் ஆராய்ச்சி வேலைகளிலும் ஈடுபட்டிருப்பவர் களுக்கும் இந்த விவரச் சுவடி பெரிதும் பயன்படும் என்று நான் நம்புகிறேன்” என்ற 14.06.1972-இல் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி அந்த விவரச் சுவடிக்கு ‘முகவுரை’ தந்துள்ளார்.

---

* 5 மைல் 8 கி.மீ.

தமிழக அரசு வெளியிட்ட (1972) இராமநாதபுரம் கெஜெட்டியரில் கச்சத்தீவு பற்றி கூறப்பட்டுள்ள வாசகங்கள் இதோ . . .

இராமேஸ்வரம் கர்ணத்தின் அதிகார எல்லைக்குட்பட்டது

“கச்சத்தீவு, இராமேசுவரத்துக்கு வடகிழக்கே 10 மைல் தொலைவில் இருக்கிறது. ஜமீன் ஒழிப்புக்கு முன், இராமநாதபுரம் அரசர் இத்தீவைத் தனிநபர்களுக்குக் குத்தகைக்கு விட்டுக் கொண்டிருந்தார். மீனவர்கள் இங்கு மீன் பிடிக்கச் செல்லுகின்றனர். இங்கு கிடைக்கும் தண்ணீர், சுத்தமில்லாமல் இருப்பதால் ‘கச்சா’ என்ற பெயர் இத்தீவுக்கு ஏற்பட்டது. இந்தத் தீவின் சர்வே எண் 1250; பரப்பளவு 282.50 ஏக்கர். இதில் ரோமன் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று இருக்கிறது. தங்கச்சி மடத்திலிருந்து ஒரு பாதிரியார் சென்று பிரார்த்தனை, வழிபாடுகளை நடத்துகிறார். இந்தத் தீவு, இராமேஸ்வரம் கர்ணத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்டது.”

இராமேஸ்வரம் ஆலயத்திற்கு மலர்கள்

இராமேசுவரம் இராமநாதசுவாமி மலைவளர் காதலி அம்மை ஆலயத்திற்கு பூஜைக்கான மலர்கள் கச்சத் தீவிலிருந்து வந்துள்ளது.

இராமேஸ்வரம் கோயில் ஆடு மாடுகள்

இராமேசுவரம் கோயிலுக்கு அடியார்களால் நன்கொடையாக அளிக்கப்பட்ட ஆடு, மாடு, எருதுகள் கச்சத் தீவில் மேய்ச்சலுக்கு விடப்பட்டுள்ளன.[*]

ஐரோப்பியர் ஆதிக்கம்

போர்த்துக்கீசியர், டச்சுக்காரரர்கள், ஆங்கிலேயர் ஆதிக்கம் என இலங்கையில் தொடர்ந்து ஏற்பட்டு வந்தது. சேதுபதிகள் சீமையிலும் சேதுபதி அரசர்கள் ஆட்சி 1803-இல் முடிவுக்கு வந்தது. அது முதல் இராமநாதபுரம் ஜமீன்தாரி முறை கொண்டு வரப்பட்டது.

இராணி மங்களேஸ்வரி நாச்சியார்

21.02.1803-இல் இராணி மங்களேஸ்வரி நாச்சியார் முதல் ஜமீன்தாரியாக நியமிக்கப்பட்டார்.[**] சேதுபதிகள் ஆங்கிலேயரின்

---

* 01.04.1973 இலங்கை ‘தினகரன்’.

** Raja Ram Rao, T., Manual of Ramnad Samasthanam, 1894, p. 269.

ஆட்சிக்குட்பட்ட ஜமீன்தார்கள் ஆயினர். அப்போது ஆங்கிலேயர்களால் அளிக்கப்பட்ட ஜமீன்தார் நில உரிமைச் சட்டப்படி கச்சத்தீவு சேதுபதிகட்கு உரித்ததாகவே எழுதித் தரப்பட்டது.

அண்ணாசாமி சேதுபதி (1812 – 1815)

இராணி மங்களேஸ்வரி நாச்சியாருக்குப் பின் அண்ணாசாமி சேதுபதி, முத்து விஜயரகுநாத சேதுபதி என்று அழைக்கப்பட்டார். இவர் 1820-இல் மறைந்தார். இவர் தமது மைத்துனர் இராமசாமித் தேவரைச் சுவீகாரபுத்திரனாக நியமித்தார்.

விஜயரகுநாத இராமசாமி சேதுபதி (1814 – 1830)

14 ஆண்டுகள் நீடித்த வாரிசுரிமை வழக்கின் காரணமாக இராமநாதபுரம் சமஸ்தானம் முதன்முறையாக அது வரை இல்லாத அளவிற்கு வறுமையில் இருந்து வந்தது. விஜயரகுநாத இராமசாமி சேதுபதி 96,000 ரூபாய் கடனில் இருந்தார்.* இந்த நிலையில் கும்பெனியார் 1822-இல் சேதுபதி மன்னரிடமிருந்து கச்சத் தீவை அனுபவிக்கும் உரிமையை குத்தகையாகப் பெற்றனர்.**

இஸ்திமிரார் சன்னத்

ஜமீன்தார்களின், நிலஉரிமைப் பட்டயமான 'இஸ்திமிரார் சன்னத்' உடன்பாட்டின்படி ஆங்கிலேய அரசு சேதுபதிகளின் உரிமையைத் தொடர்ந்து ஏற்றது. ஜமீன் நில உரிமைச் சட்டப்படி 20-க்கு மேற்பட்ட தீவுகள் கரையோரக் கிராமங்களுடன் நிர்வாக வசதிக்காக இணைக்கப்பட்டன. அதன்படி கச்சத்தீவு இராமேசுவரக் கிராமத்துடன் இணைக்கப்பட்டது. கச்சத்தீவில் முத்துக்குளித்து வந்தனர் சேதுபதியின் ஆட்கள்.

விக்டோரியா மகாராணி பிரகடனம்

இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணியாரின் பிரகடனத்தின் வாயிலாக கச்சத்தீவின் உரிமை இராமநாதபுரம் சேதுபதிகளுக்கே உண்டு என்றறிவித்தார்.

அந்தோணியப்பர் தேவாலயம்

இராமநாதபுரம் தொண்டி அருகேயுள்ள நம்புதாளை என்ற

---

* டாக்டர் எஸ்.எம். கமால், சேதுபதி மன்னர் வரலாறு, இராமநாதபுரம், 2003, ப. 97.

** புலவர் ராசு, கச்சத்தீவு, முற்கூறிய நூல், ப. 7.

ஊரைச் சேர்ந்த மீனவர் சீனிக்குப்பன் சென்ற படகு புயலில் சிக்கியது. அவர் அச்சிக்கலில் இருந்து தன்னைக் காப்பாற்ற அந்தோணியப்பரை வேண்டிக் கொண்டார்; புயல் அபாயத்திலிருந்து தப்பினார். அதற்குப் பரிகாரமாக கச்சத் தீவில் அந்தோணியப்பர் தேவாலயத்தைக் கட்டினார்.* சிற்றுக் கொட்டகையாக இருந்த இந்த ஆலயம் 02.01.1951-இல் தான் ஓடுகள் பூட்டப்பட்ட கட்டிடமானது.

காடு வளர்க்கும் திட்டம்

இராமேசுவரம் நகரியத்தின் ஒரு பகுதியாகவும், இராமேசுவரம் கர்ணத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியாகவும் இருந்த கச்சத் தீவில் காடு வளர்க்கும் திட்டத்தை ஒரு சமயத்தில் இராமேசுவரம் நகரியக் குழுவினர் மேற்கொண்டதும், பின்னர் திட்டம் கைவிடப்பட்டதும் முந்தைய வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகும்.

23.06.1880

இராமநாதபுரம் ஜமீன்தாரியைச் சேர்ந்த எட்டு கிராமங்களையும், **கச்சத்தீவு** உள்ளிட்ட 4 தீவுகளையும் சாயவேர் சேகரிக்க இராமநாதபுரம் கலெக்டர் எட்வர்டு டர்னர் அவர்களிடமிருந்து குத்தகைக்கு வாங்கினர்.

முகம்மது அப்துல்காதர் மரைக்காயர்

கீழக்கரையைச் சேர்ந்த சாயபு மாப்பிள்ளை மரைக்காயர் மகன் முகம்மது அப்துல்காதர் மரைக்காயரும், இராமநாதபுரம் இராமசாமிப்பிள்ளை மகன் முத்துசாமிப்பிள்ளையும் சேர்ந்து கூட்டாக வருடம் ஒன்றுக்கு 700 ரூபாய்க்கு குத்தகைக்கு 23.06.1880-இல் எடுத்துள்ளனர்.

கச்சத்தீவு உள்ளிட்ட பகுதிகளை குத்தகைக்கு எடுத்த ஆவணம் இராமநாதபுரம் பதிவு அலுவலகத்தில் 02.07.1880-இல் பதிவாகியுள்ளது. இதோ அந்த பத்திரம் முழுவதுமாக...

02.07.1880

பதிவு எண் - 510 / 80

02.07.1880

---

* சோமலெ, இராமநாதபுரம் மாவட்டம், சென்னை, 1972, ப. 303.

1 புத்தகம் - 16-ஆம் வால்யூம் - ரிஜிஸ்டர்

பத்திரத்திற்கு நகல்

(7ரூ. முத்திரைத் தாளில் எழுதப்பட்டுள்ளது)

1880-ஆம் வருஷம் ஜூன் மாதம் 23-ஆம் தேதி மதுரை டிஸ்டிரிக்கு ரிஜிஸ்தார் சரகத்து இராமநாதபுரம் சப் டிஸ்டிரிக்கு இலக்கம் இராமநாதபுரத்திலிருக்கும் மதுரை ஜில்லா ஸ்பெஷல் கலெக்டர் எட்வர்டு டர்னர் துரையவர்களுக்கு மேற்படி இராமநாதபுரம் டிஸ்டிரிக்குக்குச் சேர்ந்த கீழக்கரையிலிருக்கும் சோனக ஜாதி சாயபு மாப்பிள்ளை மரைக்காயர் குமாரர் வியாபாரமும் விவசாயமும் ஜீவனம் முகம்மது அப்துல் காதர் மரைக்காயர் 1 இராமசாமிப்பிள்ளை மகன் விவசாய ஜீவனம் முத்துச்சாமி பிள்ளை 2 பேரும் எழுதிக் கொடுத்த கறார் நாமா என்னவென்றால் இராமநாதபுரம் ஜமீன்தாரியைச் சேர்ந்த சாயவேர்களின் பிரத்யேகமாய்க் குத்தகைக்குட்பட்டிருக்கிற ஏர்வாடி கிராமம் மேல்பக்க எல்லைக்கும், மேல்பக்கமிருக்கிற பாலையர் முதல் வேம்பாத்து கீழ்ப்பாக்கம் வரையிலும் அதற்குள்ளடங்கிய தீவுகளும் நீங்கலாக இத்துடன் சேர்ந்திருக்கிற நான்கெல்லை ஜாப்தாவில் அடங்கிய மேற்படி பாலையாத்துக்குக் கீழ்ப்பக்கம் முதல் இராமநாதபுரம் பாம்பன், முதுகுளத்தூர், திருவாடனை, சப் ரிஜிஸ்திராருக்குச் சேர்ந்த சாலைக்கரை வட்டகையென்று ஆத்தங்கரை, இராமேசுவரம், ஏர்வாடி, திருப்பாலைக்குடி, வகையறாவிலும் அதற்குள்ளடங்கின தீவுகளிலும் உண்டாகிற சாயவேர்களை இராமநாதபுரத்தில் சூராபீசில் துரையவர்கள் முன்பாக நாளது மாதம் 21-ஆம் தேதி கிஸ்தியாரின் நிபந்தனையையும் உச்சரித்து யேலங் கூறினதில் கடோசியாக பசலி ஒன்றுக்கு ரூ700. இந்த ஏழுநூறு வீதம் 1290-ஆம் பசலி முதல் 1294 ஆம் பசலி வரை பசலி 5-க்கு எங்களில் முத்துவாமிப்பிள்ளையாகிய நான் ஏலத்தில் ஒப்புக் கொண்டு அதற்காக பசலி குத்தகைத் துகையில் கால்வாசி துகை ரூ175 தேதி 21-ல் டேவணியாகச் செலுத்தியிருப்பதால் மேற்படி தீவு வகையறாக்களில் உண்டாகும் சாயவேர்களை நாங்களிருவரும் மேற்படி 1290-ஆம் பசலி முதல் 1294 ஆம் பசலி வரை அனுபவித்துக் கொண்டு ஒவ்வொரு பசலிக்கும் ஏற்பட்டிருக்கும் மேல்கண்ட குத்தகைத் துகையை கிஸ்திப் பிரகாரம் நாங்களிருவரும் செலுத்தி வர வேண்டியது. டேவணித் தொகை கடேசிப் பசலி வாயிதாவுக்குச் செல் வைத்துக் கொள்ளவும். எந்தப் பசலியிலாவது கிஸ்தி

வாயிதாப் பிரகாரம் பணம் செலுத்தத் தவறினால் தவறின தேதி முதல் மாதம் 1-க்கு 100-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி சேர்த்திக் குடுக்கவும். அப்படியாவது பசலி வகையறாக்குள் அந்தந்தப் பசலி குத்தகைத் துகையைப் பூரா செலுத்தி விடாத அடுத்த பசலி குத்தகை பாத்தியதையையும் டேவணியையும் இழந்து விடவும் என்று ஏலம் கூறினதில் நஷ்டம் சம்பவித்தால் அந்த நஷ்டத்திற்கு உத்திரவாதம் செய்யவும் அனுபவித்த பசலிகளுக்குள்ள குத்தகைத்துகையை நிலுவையிருந்தால் செல்லாகும் தேதி வரை வாயிதா தவறின தேதி முதல் மேல்கண்டபடி வட்டி சேர்த்துச் செலுத்தவும் நாங்களும் எங்களுடைய வாரிசுகளும் பிரதிநிதி வகையறாவும் உத்திரவாதியாக இருப்போம்.

கிராமாந்தரங்களுக்கு விபரம்

மதுரை டிஸ்டிரிக்கு பாம்பன் சப் டிஸ்டிரிக்கு சேகரத்தில் மன்னாரு கரைக்கும் மேற்கு வடசமுத்திரத்திற்கும் தெற்கு சொக்கம்பிள்ளை மடத்திற்கும் கூத்தன்புளிக்கும் முட்டக்கோன் வலசைக்கும் கிழக்கு குத்துக்கால் தீவு, முயல் தீவு, மன்னார் தீவு தென்கரைகளுக்கு வடக்கும் இந்நான்கெல்லைக்குட்பட்ட கிராமங்களின் விபரம்.

இராமேஸ்வரம் உள்கடை உட்பட்ட கிராமம்	– 1
பாம்பன் தங்கச்சிமடம் கிராமம்	– 1
மண்டபம் கிராமம்	– 1
மரைக்கான்பட்டினம் கிராமம்	– 1
குஞ்சியா வலசை கிராமம்	– 1
அருப்புக்காடு கிராமம்	– 1
வேதாளை கிராமம்	– 1
சாத்தன்கோன் வலசை கிராமம்	– 1
ஆகக் கிராமங்கள்	– 8

குத்துக்கால் தீவு	– 1
முயல் தீவு	– 1
மன்னாளித் தீவு	– 1
கச்சத் தீவு	– 1
ஆக தீவு	– 4

(ஒப்பம்) முத்துச்சாமி பிள்ளை, முகம்மது அப்துல் காதர் மரைக்காயர்

04.12.1885

இராமநாதபுரம் சேதுபதி அரசரின் எஸ்டேட் மானேஜர் டி ராஜாராமராயர் (Raja Ram Rao) அவர்களிடமிருந்து இராமநாதபுரம் இராமசாமிப்பிள்ளை மகன் முத்துசாமிப் பிள்ளை என்பவர் சாயவேர் சேகரிக்க கச்சத்தீவு அடங்கிய பகுதியை ஆண்டுக் குத்தகை 215 ரூபாய்க்கு பெற்றார்.

இதோ அந்த வரலாற்று ஆவணம் ...

பதிவு எண் - 134 / 1885

ரிஜிஸ்டர் பத்திரத்திற்கு நகல்

(3 ரூ. முத்திரைத் தாளில் எழுதப்பட்டிருக்கிறது)

1885-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 4-ஆம் தேதி மதுரை டிஸ்டிரிக் ரிஜிஸ்திரார் சரகத்துக்கு இராமநாதபுரம் சப் ரிஜிஸ்தர் இலாக்கா இராமநாதபுரத்திலிருந்து ஆனரொரி டிப்டி கலெக்டர் அன்று மானேஜரும் இராமநாதபுரம் எஸ்டேட் மானேஜருமான டி. ராஜாராமையர் அவர்களுக்கு மேற்படி இராமநாதபுரம் சப் டிஸ்டிரிக்கு மேற்படி இராமநாதபுரத்திலிருக்கும் அகம்படிய ஜாதி இராமசாமி பிள்ளை மகன் விவசாய ஜீவனம் முத்துசாமிப்பிள்ளை எழுதிக் கொடுத்து கறார் நாமா இராமநாதபுரம் ஜமீன்தாரியைச் சேர்ந்த சாயவேர்களின் பிரத்தியேகமாய் குத்தகை ஏற்பட்டிருக்கிற ஏர்வாடி மேல்பாற்கெல்லைக்கும், மேல்பக்கமிருக்கிற பாலையார் முதல் வேம்பாத்து கீழ்பக்கம் வரையிலும், அதற்குள் அடங்கிய தீவுகளும் நீங்கலாக அடியில் கண்ட நான்கெல்லையிலடங்கிய மேற்படி பாலையாத்துக்கு கீழ்ப்பக்கம் முதல் இராமநாதபுரம், பாம்பன், முதுகுளத்தூர், திருவாடானை சப்டிஸ்டிரிக்கு நேர்ந்த சாலைக்கரை வட்டகையென்று ஆற்றங்கரை, இராமேஸ்வரம், ஏர்வாடி, திருப்பாலைக்குடி வகையறாவிலும் அதற்குள்ளடங்கிய தீவுகளும் உண்டாகிற சாயவேர்களை இராமநாதபுரத்தில் மேற்படி மானேஜரவர்கள் முன்பாக நாளது 85-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 30 தேதியில் மேற்படியார் நிபந்தனையையும் எச்சரித்து ஏலம் கூறினதில் கடோசியாக பசலி 1-க்கு 215 ரூபாய் இந்த ரூபாய் 215 வீதம் 1295 பசலி முதல் 1299 வரை பசலி 5-க்கு நான் ஏலத்தில் ஒப்புக் கொண்டு அதற்கான பசலி குத்தகைத் துகையில் கால்வாசித் துகை ரூ.53 அணா 12 மேற்படி 30 தேதியில் டேவணியாகச் செலுத்தியிருப்பதால் மேற்படி தீவு வகையறாக்களில் உண்டாகிற சாயவேர்களை நான் மேற்கண்ட 1295-ஆம் பசலி முதல் 1299-ஆம் பசலி வரை அனுபவித்துக் கொண்டு ஒவ்வொரு பசலிக்கும் ஏற்பட்டிருக்கிற மேல் குத்தகைத் தொகையை கிஸ்தி பந்தல் பிரகாரம் நான் செலுத்தி வந்து டேவணித் தொகையை கடோசிப் பசலி கடோசி வாய்தாவுக்குச் செல் வைத்துக் கொள்ளவும். எந்தப் பசலியிலாவது கிஸ்தி வாயிதாப் பிரகாரம் பணம் செலுத்தத் தவறினால் தவறின தேதி முதல் மாதம் ஒன்றுக்கு 100-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி சேர்த்துக் கொடுக்கவும் அந்தப்படிக்காக நாளது பசலி வகையறாக்குள் அந்தந்தப் பசலி குத்தகைத் துகையை உத்திரவாதம் செய்யவும் அனுபவித்த பசலிக்குள்ள குத்தகையத் துகையில் நிலுவையிருந்தால் அதற்குச் செல்லாக்கும் தேதி வரை வாயிதா தவறின தேதி முதல் மேல் கண்டபடி வட்டி சேர்த்துச் செலுத்தவும் உத்திரவாதியாக இருப்பேன் என எழுதிக் கொடுத்த கறார் நாமா.

கிராமாந்தரங்களுக்கு விபரம்

மதுரை டிஸ்டிரிக்கு பாம்பன் சப்டிஸ்டிரிக்கு சேகரத்தில் மன்னாருக்கரைக்கும் மேற்கு, வட சமுத்திரத்திற்கும் தெற்கு, சொக்கப்பிள்ளை மடத்திற்கும் கூத்தன்புளிக்கும் முட்டக்கோன் வலசைக்கும் கிழக்கு குத்துக்கால் தீவு, முயல் தீவு, மன்னாளித் தீவு தென்கரைக்கும் வடக்கு இந்நான் கெல்லைக்குட்பட்ட கிராமாந்தரங்கள் விபரம்.

இராமேஸ்வரம் உள்கடையுட்படக் கிராமம்	– 1
பாம்பன் தங்கச்சிமடம் யுட்படக் கிராமம்	– 1
மண்டபம் கிராமம்	– 1
மரைக்கான்பட்டினம் கிராமம்	– 1
குஞ்சியா வலசை கிராமம்	– 1
அருப்புக்காடு கிராமம்	– 1
வேதாளை கிராமம்	– 1
சாத்தன்கோன் வலசை கிராமம்	– 1
ஆகக் கிராமங்கள்	– 8

தீவுகள் விவரம்

குத்துக்கால் தீவு	– 1
முயல் தீவு	– 1
மன்னாளித் தீவு	– 1
கச்சத் தீவு	– 1
ஆக தீவு	– 4

(ஒப்பம்) முத்துசாமிப்பிள்ளை

சாட்சி

இராமநாதபுரத்திலிருக்கும் குமாரசாமிப்பிள்ளை மகன் முத்துவீரப்பிள்ளை மேற்படியூரிலிருக்கும் மேனேஜ் மெண்டாபீஸ் கிளார்க் கிருஷ்ணசாமி ஐயங்கார் இந்தக் கறார் நாமா எழுதியது.

மேற்கூறிய இரண்டு ஆவணங்களிலும் பாம்பன் - முதுகுளத்தூர், திருவாடனை சப்டிஸ்ரிக்கைச் சேர்ந்த சா லைக்கார வட்டகை என்ற ஆற்றங்கரை, இராமேசுவரம் ஏர்வாடி, திருப்பாலைக்குடி வகையறாவிலும், அதற்குள் அடங்கிய தீவுகளும் என்று கூறப்படுவதில் கச்சத்தீவு ஒன்றாக மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

திவான் அலுவலகத்தில் தனிக்கணக்கர்

கச்சத் தீவில் விறகு, பூ, மீன், சங்கு, முத்து, புல் வகை, சாயவேர் மருந்து மூலிகைகள் ஏராளமாகக் கிடைத்ததால் இராமநாதபுரம் சேதுபதியின் திவான் அலுவலகத்தில் கச்சத் தீவின் வருவாயைக் கவனிப்பதற்கென்றே ஒரு கணக்கர் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது முந்தைய வரலாறு ஆகும்.

சமஸ்தானப்பட்டியலில் – 1911

1911-இல் வெளியிடப்பட்ட இராமநாதபுரம் சேதுபதிகட்குரிய சமஸ்தானப் பட்டியலில் கச்சத்தீவு குறிக்கப்பட்டுள்ளது.

01.07.1913

இராமநாதபுரம் அரசரிடமிருந்து சென்னை அரசாங்கம் 15 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு சில தீவுகளை *01.07.1913*-இல் எடுத்துள்ளது. அதில் கச்சத் தீவும் அடங்கியுள்ளது. சங்குகள், ஆமை ஓடுகள், கிளிஞ்சற்சிற்பிகள் ஆகியவைகளை கச்சத் தீவிலிருந்து எடுத்துக் கொள்ளும் இக் குத்தகைக்குரிய தொகை ரூபாய் 50,000 ஆகும்.

19.02.1922

இராமநாதபுரம் திவான் ஆர். சுப்பையா நாயுடு அவர்கள், ஆர். ராஜேஸ்வர சேதுபதி அவர்களுக்கு இராமநாதபுரம் ஜமீன் கடல் எல்லைகள் பற்றி எழுதி அளித்ததில் 'கச்சத் தீவு' பற்றிய விவரங்கள் உள்ளது.

27.02.1922

இராமநாதபுரம் திவான் ஆர். சுப்பையா நாயுடு 19.02.1922-இல் அளித்த கடல் எல்லைகள் பற்றிய ஆவணத்தில் 27.02.1922-இல் சேதுபதி அரசர் இசைவு ஏற்பு (Endorsement) அளித்துள்ளார்.

1936

இராமநாதபுரம் சேதுபதியிடமிருந்து அரசு பெற்று மீனவர்களுக்கு குத்தகைக்கு கச்சத்தீவை விட்டது. சில வேளைகளில் சேதுபதியின் அலுவலர்கள் நேரடியாக குத்தகைக்கு விட்டுள்ளனர். *1936*-இல் குத்தகை விதிகள்

புதுப்பிக்கப்பட்டபோதும், கச்சத்தீவு குத்தகை இடங்களில் ஒன்றாக இருந்தது.

01.07.1943 – 30.06.1944

தொண்டி நம்புதாழையைச் சேர்ந்த மீனவர்கள் கச்சத்தீவுப் பகுதிகளை சென்னை மாநில அரசாங்கத்திடமிருந்து குத்தகைக்குப் பெற்றனர். சென்னை மாகாண மீன் வளத்துறை உதவி இயக்குநர் 02.11.1943-இல் உத்திரவு எண் 15/ 1943 - 1944-இல் இது காணப்படுகிறது.

செய்யது அப்ஸ்தாகிர்

நம்புதாழையைச் சேர்ந்த V.M. சீனத்தம்மாள் மகன் செய்யது அப்ஸ்தாகிர் என்பவருக்கு அப்போது கச்சத்தீவு பகுதியின் லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

கே.எஸ்.முகம்மது மீராசா மரைக்காயர்

01.07.1947 முதல் 30.06.1949 வரை (பசலி 1356 - 1359 வரை) இராமநாதபுரம் சேதுபதி ஆர். சண்முக ராஜேஸ்வர சேதுபதி அவர்களின் அதிகாரம் பெற்ற திவான். வி. பொன்னுச்சாமிப் பிள்ளை அவர்களிடமிருந்து கே.எஸ். முகம்மது மீராசா மரைக்காயர் கச்சத் தீவை குத்தகைக்கு எடுத்துள்ளார்.

இதோ அந்தக் குத்தகை ஆவணம் . . .

இராமேஸ்வரம் சப்ரிஜிஸ்தராபீஸ்

எண் 278 / 1948 / 26.07.1948

1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 2 இராமநாதபுரத்திலிருக்கும் ஸ்ரீ.ந. முத்துராமலிங்க சேதுபதியவர்கள் குமாரர் மரவ ஜாதி ராஜாங்க அந்தஸ்து இராமநாதபுரம் ராஜா ஸ்ரீ ஆர். ஷண்முக ராஜேஸ்வர சேதுபதியவர்களாகிய நாகநாத சேதுபதியவர்கள் பவர் பெற்ற திவான் ஸ்ரீ. வி. பொன்னுச்சாமி பிள்ளையவர்கள் 1-வது பார்டியாகவும் . . . . லிருக்கும் ஜனாப் . . . . பிள்ளை மகன் கே.எஸ். முகம்மது மீராசா மரைக்காயர் 2-வது பார்டியாகவும் எழுதிக் கொண்ட குத்தகை தெஸ்தாவேசு.

1) 1-வது பார்டியவர்களின் சமஸ்தானத்துக்குப் பாத்தியமான சமஸ்தானம் அனுபவத்திலிருக்கும் அடியில் கண்ட தீவின் 1356-ம் பசலி முதல் 1358-ம் பசலி முடிய குத்தகையை 2-வது பார்டி 1-வது பார்டியவர்களின் தாசில்தாரிடம் பசலி 1-க்கு ரூ.23.2.0 வீதம் ஒப்புக்கொண்டும் அதன் விஷயமாய் ஏற்பட்ட நடவடிக்கையின் பேரில் 1-வது பார்டியவர்களின் தாசில்தாரிடம் பசலி 1-க்கு ரூ23.2.0 வீதம் ஒப்புக் கொண்டும் அதன் விஷயமாய் ஏற்பட்ட நடவடிக்கையின் பேரில் 1-வது பார்டியவர்களின் (Huzur Roc. E4 10314/42, dated 15.02.1947 No. Proceedings) மூலம் அப்ரூவல் ஆர்டர் பிறப்பிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி பசலிக் குத்தகைத் துகை ரூ.69.69-வும் 2-வது பார்டியால் 1-வது பார்டியின் இராமநாதபுரம் தாலுக்கா கஜானாவில் 30.01.1947 தேதி 141820 செலான் மூலம் இருசால் செய்யப்பட்டிருக்கிறது.

2. அந்தப்படி அடியில் கண்ட தீவை 2-வது பார்டி 01.07.1946 முதல் குத்தகைக்கு அனுபவம் எடுத்துக் கொண்டிருக்கிறபடி 01.07.1947 தேதி பசலி 1-க்கு ரூ.23.2.0 வீதம் வீதம் 3 பசலிக்கு அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

3. குத்தகை பாத்யதையை 2-வது பார்டி 1-வது பார்டியவர்களின் அனுமதியன்னியில் வேறு யாருக்கும் Transfer செய்யக்கூடாது.

4. இவ்விதம் மேற்படி குத்தகை பாத்யதையை அனுபவித்துக் கொண்டு குத்தகை காலம் திகைவாகிற 1949ஆம் வருடம் ஜுன் மாதம் ஆகையறாக்கு எவ்விதப் பின் துயர்ச்சியுமன்னியில் 2-வது பார்டி 1-வது பார்டியின் தாலுக்கா தாசில்தாரிடம் ஒப்புவித்துவிட வேண்டியது. இதன்படி 1-வது பார்டி எஸ்டேட்டிற்கும் 2-வது பார்டியும் அவரவர்களின் வாரிசுகளும் அவர் பாத்யதையை அடைகிறவர்களும் கட்டுப்பட்டு நடந்து வர வேண்டியது.

சொத்து விபரம்

இராமநாதபுரம் ஜில்லா ராமேஸ்வரம் சப்-ரிஜிஸ்திரேஷனுக்கு தனுஸ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே இருக்கும் சமஸ்தானத்துக்குப் பாத்தியமான கச்சத் தீவு.

மேற்கண்ட வரலாற்று ஆவணங்கள் மூலம் நான்கு நூற்றாண்டுகளாக கச்சத்தீவு இராமநாதபுரம் சேதுபதி அரசரின் பரம்பரை உரிமைச் சொத்தாக இருந்தது என்பது மிகவும் தெளிவாகப் புலப்படுகிறது.

1948

1948-இல் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டது. கச்சத்தீவை சேதுபதிகள் அரசிடம் ஒப்படைத்தனர்.

1952 – 1956 வரைபடங்கள்

கி.பி. 1874-இல் கர்னல் வாக்கர், மேஜர் பிரான்ஃபீல்டு இருவரும் இந்தியாவின் அளவைத் துறைக்காக கச்சத்தீவை அளந்தனர். அந்தோணியார் கோவிலுக்கு முன்புறம் இந்திய அரசின் அளவைத் துறையினர் நட்ட தூண் உள்ளது.

1895, 1930-களில் மீண்டும் கச்சத்தீவு அளவை செய்யப்பட்டு இந்திய அரசு வரைபட ஆவணங்களில் குறிக்கப்பட்டது. 1952, 1956-ஆம் ஆண்டுகளில் வெளியிடப் பெற்ற வரைபடங்கள் **அனைத்திலும் இராமேசுவரத்தின் ஒரு பகுதியே கச்சத்தீவு என்பது மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.**

பிரச்சினை ஆரம்பம் – 1955

இரண்டாம் உலகப் பெரும் போரின்போது *(1939 - 1944)* இங்கிலாந்துக் கப்பற்படை கச்சத் தீவில் தங்கி வெடிகுண்டுகளை வெடித்துச் சோதனை செய்தது. இலங்கை விடுதலை அடையும் வரையில் கச்சத்தீவு பிரச்சனை எழவில்லை. *1955-இல்* இலங்கைக் கடற்படை வீரர்கள் தமிழகத்திற்குச் சொந்தமான கச்சத்தீவைத் தம் பயிற்சிக்காகப் பயன்படுத்தினர். அப்போது இந்திய அரசு வெறும் வாயால் கண்டிப்பதோடு நின்றது.

1956

1956 மார்ச் மாதத்தில் மீண்டும் இலங்கைக் கடற்படை பயிற்சிக்கு கச்சத்தீவில் முயற்சித்தது. இந்தியப் பாராளுமன்றத்தில் கடுமையாக அது எதிரொலித்தது.

அபகரிக்கும் முயற்சி

'இலங்கை அரசு இந்தியாவின் எல்லைக்குள் தமிழகத்தின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாக விளங்கும் போர் முக்கியத்துவம் வாய்ந்த கச்சத் தீவில் நுழையப் பார்க்கின்றது' என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்தனர். கச்சத்தீவு இந்திய அளவில் அப்போது அறிமுகம் ஆனது.

'கச்சத்தீவு பற்றிப் போதிய செய்திகள் இந்திய அரசிற்கு இல்லை' என்று பிரதமர் பண்டிதர் நேரு அப்போது கூறினார்.*

இலங்கை அமைச்சரவை செயலாளர் பி.பி. பியரிஸ்

1936 - 1940-களில் பிபி. பியரிஸ் உதவி அரசு வரைவாளராக பணியாற்றியவர். தனது பணிக்காலத்தில் ஆவணங்களைப் பார்வையிட்டதாகவும், விக்டோரியா அரசியின் பிரகடனத்தைப் பார்வையிட்டுக் **கச்சத்தீவு இலங்கைக்கு உரியது அல்ல. சேதுபதிக்கே உரியது என்று கண்டதாகவும்,** அவ்வாறே வரைபடம் வரைந்ததாகவும் அரசுத்துறை செயலாளராக இருக்கும்போது அறிவித்தார்.

இலங்கை அரசின் அமைச்சரவையின் செயலாளர் கருத்து – 1966

I remember coming across this problem when I was an Assistant Legal Draftsman. I had to deal with a file for the purpose of verifying some of the boundries of the Northern District. In the process of revising the draft proclamation, I had to trace the History of the boundary back over many years. I remember coming across a proclamation issued probably in the time of queen Victoria, in which Island of **Kachchativu is excluded from the Northern District as it belonged to the Raja of Ramnad.****

08.05.1966

08.05.1966-இல் பி.பி. பியரிஸ் அறிவித்திருந்ததை *09.05.1966* 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு செய்தியாக வெளியிட்டது.

28.02.1968

'கச்சத் தீவினை இலங்கை அரசு எடுத்துக் கொண்டது' என்று *28.02.1968-இல்* இலங்கை நாளிதழ்கள் எழுதின.***

இலங்கை அரசு அத்தகைய முடிவு எதுவும் எடுக்கவில்லை என்று இந்திய அரசு தெரிவித்தது.

---

* Lok Sabha Debates, 1956 Cols 872 and 2222.

** By. B.P. Pieris, (1966 - May, Secretary of the Cabinet of Ceylon, Ceylon 'Daily Mirror' News)

*** **செம்பியன், கச்சத்தீவு, சென்னை, 1987, ப. 2.**

01.03.1968

இந்தியவெளி விவகார ராஜாங்க அமைச்சர் பி.ஆர். பகத் 'கச்சத்தீவு இந்தியா - இலங்கை இரு நாடுகட்கும் உரியதல்ல' என்று கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் 'வெட்கம் - வெட்கம்' என்று முழங்கினர்.

28.06.1974

இலங்கைக்கு கச்சத்தீவை கொடுப்பது என்று இந்திய அரசு முடிவு செய்தது. 28.06.1974 அன்று கச்சத்தீவு பற்றிய ஒப்பந்தத்தை இலங்கையில் இருந்து வெளிநாட்டு இலாகா காரியதரிசி ஜெயசிங்கே டெல்லிக்கு விமானத்தில் கொண்டு வந்தார். அதில் பிரதமர் இந்திரா காந்தி கையெழுத்திட்டார்.

அது போலவே டெல்லியில் இருந்து வெளிநாட்டு இலாகா காரியதரிசி கேவல்சிங், கச்சத்தீவு ஒப்பந்தத்தை இலங்கைக்கு கொண்டு போனார். அதில் இலங்கை பிரதமர் திருமதி பண்டார நாயகா கையெழுத்திட்டார். இரண்டு பிரதமர்களும் ஒரே நேரத்தில் கையெழுத்து போடுவதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

கருணாநிதியின் நிலைப்பாடு

முதலமைச்சர் கருணாநிதியை நிருபர்கள் பேட்டிகண்டு, 'கச்சத் தீவை இலங்கைக்கு கொடுப்பதற்கு முன்னால் மாநில அரசின் கருத்து கேட்கப்பட்டதா? என்று கேட்டனர். அதற்குப் பதில் அளித்து முதலமைச்சர் கருணாநிதி கூறியதாவது.

"இரண்டு வாரங்களுக்கு முன்னால் வெளிநாட்டு இலாகா செயலாளர் கேவல்சிங் இங்கு வந்தபோது என்னிடம் அது பற்றி சில விவரங்களை விவாதித்தார்." கச்சத்தீவு விஷயத்தில் தமிழ் மக்களுடைய உணர்ச்சியை நான் அவரிடத்தில் விளக்கி இருக்கிறேன். இவ்வாறு கருணாநிதி கூறினார்.*

ஆக ஒப்பந்தம் ஏற்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பே மத்திய அரசு முதலமைச்சர் கருணாநிதியிடம் விவாதித்திருக்கிறது.

* **தினத்தந்தி, வரலாற்றுச் சுவடுகள், இலங்கைத் தமிழர் வரலாறு, 25, நாள் 03.07.2009.**

அப்போது தமிழக சட்டமன்றத்தில் திமுக உறுப்பினர்கள் எண்ணிக்கை 184. இது அறுதிப் பெரும்பான்மை. தில்லி நாடாளுமன்றத்தில் திமுக உறுப்பினர்கள் 22.

கச்சத்தீவு உடன்பாட்டை தமிழக அரசு அன்றே எதிர்த்திருக்கலாம்! ஆனால் நடந்தது என்ன?

29.06.1974

28.06.1974-இல் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு விட்டது. அதற்கு இரு வாரங்களுக்கு முன்பே வெளிநாட்டு இலாகா செயலாளர் கேவல்சிங் (Kewal Singh) வந்து முதலமைச்சர் கருணாநிதியை பார்த்திருக்கிறார். ஆனால் அப்போதே இதனை எதிர்த்திடாமல் ஒப்பந்தம் 28.06.1974-இல் கையெழுத்தான பிறகு மறுநாள் 29.06.1974-இல் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி 'ஒப்பந்தத்தை மத்திய அரசு மறுபரிசீலனை செய்து, கச்சத்தீவின் மீது இந்தியாவுக்கு அரசு உரிமை இருக்கும் வகையில் ஒப்பந்தத்தை திருத்தி அமைத்து தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது' என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார் கருணாநிதி.

23.07.1974

கச்சத்தீவு ஒப்பந்த நகலை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார். வெளி விவகார அமைச்சர் சுவரண்சிங்.

இரா. செழியன்

'தமிழ்நாட்டுக்கு உரிய கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்தது சட்ட விரோதமானது. இந்த ஒப்பந்தத்தை நாங்கள் ஏற்க மாட்டோம்' என்று அண்ணன் இரா. செழியன் முழங்கினார்.

பி.கே. மூக்கையாத் தேவர்

என்னுடைய ராமநாதபுரம் தொகுதிக்குள் அடங்கியது கச்சத்தீவு. அதை இலங்கைக்கு கொடுத்தது தவறானது. அரசியல் சட்டத்துக்கு எதிரானது. **ஏற்கனவே கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு இலங்கை அரசு தொல்லை கொடுத்து வருகிறது. எதிர்காலத்தில் போர் மூண்டால், இந்தத் தீவை இந்தியாவுக்கு எதிரான தளமாகப் பயன்படுத்தும் அபாயம் உள்ளது என்று பி.கே. மூக்கையாத் தேவர் முழங்கினார். அத்தோடு நாடாளுமன்றத்திலிந்து வெளிநடப்பும் செய்தார்.**

வாஜ்பாய்

ஜனசங்க தலைவர் வாஜ்பாய் 'இலங்கைக்கு கச்சத்தீவை தானம் செய்யும் பேரம் ரகசியமாக நடந்து இருக்கிறது. இலங்கையின் நட்பைப் பெறுவதற்காக கச்சத்தீவை தூக்கிக் கொடுப்பது கேவலம்' என்று முழங்கினார்.

முஹம்மது ஷெரீப்

பெரியகுளம் நாடாளுமன்ற உறுப்பினர் முகம்மது செரீப் பேசும்போது, 1968 ஏப்ரல் மாதம் முதல் நாளன்று நான் இந்த அவையில் கச்சத்தீவு இராமநாதபுரம் அரசருக்குத்தான் சொந்தமானது என்பதை நிலைநாட்டுதற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்தேன். அவற்றைப் பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது. இதற்கு முன்னர் நான் அந்தத் தொகுதி உறுப்பினராக இருந்தேன். அந்தப் பகுதி மக்களின் கருத்தைக் கேட்கத் தவறிவிட்டதற்காக மத்திய அரசு வெட்கப்பட வேண்டும். அரசின் இந்த நடவடிக்கையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்' என்று முஹம்மது ஷெரீப் முழங்கிவிட்டு* அவரும் நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தார்.

பி.கே.தேவ், மதுலிமாயி, வாஜ்பாய், நாஞ்சில் கி. மனோகரன் ஆகியோர் தங்களின் கண்டனங்களைத் தெரிவித்து வெளியேறினார்கள்.

24.07.1974 – ஜி. விஸ்வநாதன்

வந்தவாசி நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. விஸ்வநாதன் 1824-ன் ராமநாதபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் கிடைக்கப் பெற்ற கச்சத்தீவு ஆவணங்களின் நகல்களை சபை முன் வைத்தார்.

கச்சத்தீவு உடன்பாடு சொல்வதென்ன?

28.06.1974-இல் கையெழுத்தான கச்சத்தீவு ஒப்பந்தம் 8 விதிகளைக் கொண்டது. அதில் 5-வது விதி என்ன தெரியுமா?

"Subject to the foregoing, Indian fisherman and Pilgrims will enjoy access to visit Kachativu as hitherto, and will not be required by Sri Lanka to obtain travel documents or visas for these purposes.

* Lok Sabha Debates, 23.07.1974, Cols. 186 - 201.

மேற்கண்ட 4-ஆம் விதிக்கமைய, இந்திய மீனவர்களும், வழிபாட்டுக்குச் செல்லும் பயணிகளும் கச்சத் தீவுக்கு, இதுநாள் வரை வந்து போனது போல வந்து போகவும், கச்சத் தீவை அனுபவிப்பதற்கும், முழு உரிமை உடையவர்கள் ஆவார்கள். இதற்காக சிங்கள அரசிடமிருந்து பயண ஆவணங்களோ, நுழைவு அனுமதிகளோ இவர்கள் பெற வேண்டியதில்லை.

மீனவர்கள் மீளாத் துயரம்

1974-இல் நமக்கு உரிமையான கச்சத்தீவினை இலங்கைக்கு தாரை வார்த்த பிறகு தமிழகத்து மீனவர்களின் துயரம் ஆரம்பமாயிற்று. 1983-இல் ஈழப்பிரச்சினை பூதாகரமாக எழுந்தது. இதுவரை தமிழக மீனவர்கள் மீது 8000 முறை சிங்களக் கடற்படை துப்பாக்கி சூடு நடத்தியுள்ளது. 15,000 பேர்களை சிறை பிடித்தது. 2,000 மீனவர்கள் தாக்குதல்களால் ஊனமுற்றனர். தமிழக மீனவர் படகுகள் நூற்றுக்கணக்கில் இதுவரை எரிக்கப்பட்டு விட்டது. தொடர்ந்து எரிக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டும் வருகிறது.

இந்திய மீனவர்களை குறிப்பாக தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படை விரட்டி விரட்டிச் சுடுகின்றது. ஒரு நாட்டின் கடற்படையோ ராணுவமோ அண்டை நாட்டுக் குடிமக்களைச் சுட்டுக் கொன்றால் மன்னிப்போ நஷ்ட ஈடோ சம்பந்தப்பட்ட நாடு கோர வேண்டும். ஆனால் இந்திய அரசு ஒரு முறைகூட இது குறித்து இலங்கை அரசிடம் கடுமையாக நடந்து கொள்ளவில்லை.

தமிழர் தலைவர் வைகோ

நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தபோது மறுமலர்ச்சி திமுகழகப் பொதுச் செயலாளர் தமிழர் தலைவர் வைகோ பலமுறை இது குறித்து பேசியுள்ளார். கடந்த 14 ஆண்டுகள் 20 முறை பிரதமருக்கு தமிழக மீனவர் மீது இலங்கைக் கடற்படையின் தாக்குதலைத் தடுக்கக்கோரி கடிதம் எழுதியுள்ளார். பல்வேறு அறப்போராட்டங்களை தொடர்ந்து தமிழக மீனவர்களுக்காக நடத்தி வருகிறார்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

படகோட்டி திரைப்படத்தில்,

தரைமேல் பிறக்க வைத்தான் – எங்களைத்
தண்ணீரில் பிழைக்க வைத்தான்
கரைமேல் இருக்க வைத்தான் – பெண்களைக்
கண்ணீரில் குளிக்க வைத்தான்

ஒரு நாள் போவார்
ஒரு நாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்

என்ற வரிகளையும் மாற்றி

ஒரு நாள் போவார்
ஒரு நாள் மடிவார்
ஒரு சாண் வயிறை வளர்ப்பவர்
உயிரைப் பறிப்பவர் இலங்கை வெறியர்தான்

என்று நினைத்து நெஞ்சுருகும் நிலைமையும் மாறிட வேண்டும்!

இந்திய அரசே எங்களுக்குச் சொந்தமான கச்சத்தீவை தாரை வார்த்தாய்! ராமேசுவரத்திலிருந்து கோடியக்கரை வரையிலான கடலோரப் பகுதிகளில் இருந்து கச்சத்தீவுக்கு மீன்பிடிக்கச் செல்லும் எங்கள் மீனவர்கள் உயிரையும் உடமையையும் தொடர்ந்து ஏன் தாரை வார்க்கிறாய்?

“இது மீன்பிடிப்பதை ஒட்டி வருகிற தகராறு அல்ல. இந்தியாவுக்கு எதிராக நடத்துகின்ற இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் - இந்தியாவை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இது ஒன்றாகும்’ என்று 1985-களிலேயே சொன்னவர் கம்யூனிஸ்ட் தலைவர் எம். கல்யாண சுந்தரம்.”*

இந்திய அரசே உனது உரிய நடவடிக்கை எப்போது?

எங்கள் மீனவர்களுக்கு விடிவு எப்போது?

---

* எம். கல்யாணசுந்தரம், கச்சத்தீவுப் பிரச்சனையும் ஈழத்தமிழர் போராட்டமும், சென்னை, 1985, ப. 13.